செ.வெ.எண்: 43 நாள்: 28.2.18

# பத்திரிக்கைச் செய்தி

## கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ரயில்வே துறையில் வெளியிடப்பட்டுள்ள பல்வேறு பணியிடங்களுக்கு இலவச பயிற்சி அளித்தல்

கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டத்தில், அனைத்து விதமான போட்டித் தேர்வுகளுக்கும், இலவச சிறப்பு பயிற்சி வகுப்புகள் தகுதி வாய்ந்த வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி வகுப்பினை பயன்படுத்தி படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பலர் அரசுப் பணிகளில் சேர்ந்துள்ளனர்.

இந்திய ரயில்வே துறையில் Group D –யில் 62907 காலிப் பணியிடத்திற்கும், உதவி இன்ஜின் டிரைவர் (Assistant Loco Pilot) மற்றும் பல்வேறு விதமான டெக்னீசியன் பதவிகளில் 26502 காலியிடங்களும் போட்டித் தேர்வின் மூலம் தகுதியான நபர்களை தேர்வு செய்யவுள்ளது. சென்னை ரயில்வே தேர்வு வாரியத்தின் www.rrbchennai.gov.in இணையதளத்தைப் பயன்படுத்தி ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். Group D பணியிடத்திற்கு விண்ணப்பிக்க கடைசி நாள் 31.03.2018. மேலும், பல்வேறு விதமான டெக்னீசியன் இப்பணிகளுக்கு விண்ணப்பிக்க கடைசி நாள் 05.03.2018. இப்பயிற்சி வகுப்புகள் 03.03.2018 அன்று முதல் கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் 03.03.2018 முதல் தினசரி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடத்தப்படவுள்ளது.

கடலூர் மாவட்டத்தை சார்ந்த படித்த இளைஞர்கள் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

உதவி இயக்குநர்,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்,
கடலூர்

வெளியீடு:- செ.ம.தொ.அ.கடலூர் 28.2.18